செ.வெ.எண்.364/2021 நாள் : 02.09.2021

# திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் மேல்குப்பம் மற்றும் வடச்சேரி ஊராட்சி மன்ற அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் மேல்குப்பம் மற்றும் வடச்சேரி ஊராட்சி மன்ற அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் மேல்குப்பம் மற்றும் வடச்சேரி ஊராட்சி மன்ற அலுவலகங்களில் மாகாந்தமா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய சரியாக வழங்கப்பட்டுள்ள பதிவேடு, பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் எத்தனை நபர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்ட பதிவேடு, வளர்ச்சி திட்ட பணிகள், சொத்து பதிவேடு, இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்விற்கு பின்னர் பதிவேடுகள் சரியாக பதிவுசெய்து பராமரிக்கப்படாமல் இருந்தது. இதன் காரணமாக மேல்குப்பம் ஊராட்சி செயலாளர் திரு.குமார் மற்றும் வடச்சேரி ஊராட்சி செயலாளர் திருமதி.செல்வராணி என்பவருக்கு 10 நாட்களுக்கான ஊதியம் வழங்க வேண்டாம் எனவும், ஏன் சரியாக பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை என்பது குறித்து விளக்கம் கேட்டு ஆணையிட வேண்டும் எனவும் ஆணையை பெற்ற 7 நாட்களுக்குள் பதிவேடுகளை சரிசெய்ய வேண்டும் எனவும், அதற்குண்டான விளக்கத்தை வழங்கப்பட வேண்டும் எனவும் மாதனூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.மனவாளன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கோவிந்தராஜ், உதவி பொறியாளர் திரு.கார்த்திகேயன், திருமதி.ஜூலியாதங்கம், பணி மேற்பார்வையாளர் திரு.ஆசைத்தம்பி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.**